கள்ளக்குறிச்சி நகர போக்குவரத்து நெரிசலைக் குறைத்திட

வெளிவட்ட சாலைப் பணிகளை விரைந்து முடிப்பீர்!

த.வெ.க. அரசுக்கு தே.மலையரசன் எம்.பி. வலியுறுத்தல்!

கள்ளக்குறிச்சி,ஜூன் 14-

கடந்த திராவிட மாடல் நல்லாட்சியில் கழக தலைவர், சமூக நீதி காவலர், முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் கொண்டு வந்த அனைத்து திட்டங்களும் அனைத்து மக்களுக்கும் பாகுபாடு இல்லாமல் சென்றடைந்தவாறு தற்போது உள்ள அரசும் அனைத்துதிட்டங்களையும் அனைத்து மக்களுக்கும் செயல்படுத்துமாறு கள்ளக்குறிச்சி எம்.பி. தே.மலையரசன் புதிய அரசுக்கு வலியுறுத்தினார்.

கள்ளக்குறிச்சி மாவட்ட துறை சார்ந்த பணிகள் குறித்த ஆய்வு கூட்டம் அமைச்சர் வன்னியரசு தலைமையில் நடைபெற்றது, இதில் மாவட்ட ஆட்சியர் பத்மஜா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஷானாஸ் விழுப்புரம் எம்பி ரவிக்குமார், எம்எல்ஏக்கள் அருள் விக்னேஷ், ராக்கேஷ் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட தே.மலையரசன் எம்பி கள்ளக்குறிச்சி நகர போக்குவரத்து நெரிசலை தவிர்ப்பதற்காக திராவிட மாடல்ஆட்சியில் கொண்டு வந்த வெளிவட்ட சாலை (*Ring Road*) பணிகளை விரைந்து முடிக்குமாறு அறிவுறுத்தினார்.

விவசாய கடன்களை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியிலும், முத்து வேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் வழியிலும் முழுமையாக ரத்து செய்யுமாறு புதிய அரசுக்கு வலியுறுத்தினார். தமிழ்நாடு மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் அடிக்கடி நடக்கும் மின்வெட்டை சரி செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

பஞ்சமி நிலங்கள் சட்ட விரோதமாக ஆக்கிரமிக்கப் பட்டிருந்தால், அவற்றை மாநில வருவாய்த்துறை அதிகாரிகள் மூலம் மீட்டு, மீண்டும் அதே பட்டியல் இன (*Scheduled Caste*) மக்களுக்கு மட்டுமே ஒப்படைக்க வேண்டும். இந்த நிலங்களை வேறு எந்த சமூகத்தினரும் விற்கவோ, வாங்கவோ சட்டப்படி உரிமை கிடையாது. ஆகவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதில் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும், அதே போல் நிலமற்ற ஏழை மக்களுக்கு மற்றும் விவசாய தொழிலாளர்களுக்கு ஏற்கனவே துரிதமாக செயல்பட்டு பட்டா வழங்கிய திராவிட மாடல் ஆட்சியின் படி நீங்களும் விரைவாக செயல்பட்டு பட்டா வழங்குமாறு கள்ளக்குறிச்சி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் புதிய அரசுக்கு வலியுறுத்தினார்.

ஆ.இராசா எம்.பி. தலைமை! ஆர்.எஸ்.பாரதி முன்னிலை!

தி.மு.க. மாணவர் அணி ஆலோசனைக் கூட்டம்!

அணிச் செயலாளர் திருமதி ஜெ.வீரமணி அறிவிப்பு!

சென்னை, ஜூன். 14-

கழக மாணவர் அணி செயலாளர் ஈரோடு ஜெ. வீரமணி விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களது அறிவுறுத்தலின்படி பி.எம். ஸ்ரீ, சி.பி.எஸ்.இ.9ஆம் வகுப்பு மும்மொழிக் கொள்கை திணிப்பை எதிர்த்து மற்றும் வி.பி. எஸ்.ஏ மசோதாவை திரும்பப் பெற கோரி ஒன்றிய அரசை கண்டித்து வருகின்ற 23ம் தேதி தி.மு.க மாணவர் அணி சார்பாக நடைபெறுகின்ற ஆர்ப்பாட்ட ஏற்பாடுகளை முன்னிட்டு வருகின்ற ஜூன் 17ஆம் தேதி மாலை 4 மணி அளவில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கழக துணை பொதுச் செயலாளர் ஆ.ராசா தலைமையில், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி முன்னிலையில் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்ட, மாநகர அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.

இதில் மேற்கண்ட மாவட்டங்களுக்கு உட்பட்ட நிர்வாகிகள் பங்கேற்றிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

சென்னை தென்மேற்கு மாவட்டம் – மயிலை கிழக்கு பகுதி 124 அ வட்ட தி.மு.க சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு கழக கொடியேற்றி, அறுசுவை உணவு, நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி 124 அ வட்ட கழக பொறுப்பாளர் மா.பா.அன்பு தலைமையில் மயிலாப்பூர் இந்தியன் வங்கி சென்னை – 4 ல் நடைபெற்றது. இதில் சென்னை தென் மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு கழக கொடியேற்றி நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி, மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம்கி.மதி எம்.சி., விமலா கிருஷ்ணமூர்த்தி எம்.சி., மாவட்ட பொருளாளர் என்.அன்பழகன், மூ.உதயசூரியன், வீ.அருண்குமார், என்.வி.லோகநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஆண்டிமடம் எஸ். சிவசுப்பிரமணியம்

ஜூன் 14 (2019)

தந்தை பெரியாரின் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, திராவிடர் கழகத்தில் உறுப்பினராகி, தந்தை பெரியார் கலந்து கொண்ட கூட்டங்களில் க அவரோடு சுற்றுப்பயணம் செய்தவர்.

1971ல் கழகத்தில் இணைந்து, ஆண்டிமடம் ஒன்றியச் செயலாளர், ஒருங்கிணைந்த திருச்சி மாவட்ட துணைச் செயலாளர், பெரம்பலூர் மாவட்டச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், வெளிமாநில தொடர்பு செயலாளர், அரியலூர் மாவட்ட அவைத்தலைவர், சட்டதிட்ட திருத்தக்குழு உறுப்பினர் என கழகத்தில், ஒன்றியம் முதல் தலைமை கழகம் வரையில் பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணி ஆற்றி வந்தவர்.

ஆண்டிமடம் ஒன்றிய பெருந்தலைவராவும், ஆண்டிமடம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர். 1998ல் மாநிலங்களவை உறுப்பினராகி, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக பாராளுமன்றத்தில் குரல் கொடுத்தவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம், ஈழத்தமிழர் ஆதரவு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

இவரது கழகப் பணியினைப் சிறப்பிக்கும் வகையில், 2015ல் நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைமைக் கழகத்தின் சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தனது திருக்கரங்களால் "பெரியார் விருது" வழங்கி சிறப்பித்தார்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பு தந்த நீதிபதிக்குப் பாராட்டு!

ஆணவக் கொலைகளைச் சட்டப்படியான - கடுமையான தண்டனைகள் மூலம் தடுப்பது அவசியம் - அவசரம்!

திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அறிக்கை!

சென்னை, ஜூன் 14-

ஆணவக் கொலைகளைச் சட்டப்படியான கடுமையான தண்டனை மூலம் தடுப்பது அவசியம், அவசரம்! இந்தக் கொலை வழக்கில் வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பு தந்த நீதிபதிக்குப் பாராட்டுகள்! இந்த உத்தரவு விரைந்து வினையாற்ற அரசிற்கு நல்வாய்ப்பாக அமைய வேண்டும் என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

ஆணவக் கொலை!

தூத்துக்குடி மாவட்டத்தில் தமது சொந்த மகள், மென் பொறியாளரான வேறு ஒரு ஜாதியைச் சேர்ந்தவரைக் காதலித்ததை ஒப்புக் கொள்ளாமல், ஜாதி வெறியின் காரணமாக அப்பெண்ணின் தந்தை, தனது மகனுடனும், மனைவியுடனும் நடத்திய ஆணவக் கொலைக்குக் காரணமாக அமைந்தார். அவரது ஜாமீன் மனு மீதான வழக்கில், ஜாதி ஆணவ வெறி எப்படித் தாய், தந்தை, மகள் என்ற பாசத்தையே பலிபீடத்திற்குக் கொண்டு போய் நிறுத்திடும் கொடுமையாக்கி, உள்ளம் இருக்க வேண்டிய இடத்தில் கள்ளமும், பள்ளமும் எப்படி ஆட்டுவிக்கிறது என்பதைச் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு. புகழேந்தி அவர்கள் நன்கு சுட்டிக் காட்டியுள்ளார். ஜாதி ஆணவ மனப் போக்கு, நமது சமூகத்தில் - பாசத்தைக்கூட கொன்று தின்றுவிடும் பேராபத்து எப்படி கடும் தொற்றுநோயாக ஆகின்றது என்பதை மிக மிகத் தெளிவுடனும், வலியுடனும் அரசுகளுக்கு நல்ல அறிவுறுத்தலாகத் தமது தீர்ப்பை அருமையாகத் தந்துள்ளார்.

தனிப்பட்ட குடும்பப் பிரச்சினையாக இது சட்டப்படி கருதப்பட முடியாது என்பதை ஆணவப் படுகொலை வழக்குகளில் உச்சநீதிமன்றம் தந்துள்ள தீர்ப்புகளும், அது அறிவுறுத்தியுள்ள தனிச் சட்டத் திற்கான தேவைகளும், ஆணவக் கொலைகளைத் தடுப்பதற்கு வலியுறுத்தியுள்ள வழிமுறைகளுமே சான்று. ஆணவப் படுகொலை என்பது நம் சமூகத்திடையே பரவி உலுக்கும் வர்ணாஸ்ரமப் பண்பாட்டுப் படையெடுப்பின் தீய விளைவே!

இதற்கான மூல வேர் எங்கே உள்ளது என்பதைக் கண்டறிய வேண்டும் அரசுகளும், அறிவார்ந்த முற்போக்காளர்களும்! புத்தரும், வள்ளுவரும், வடலூர் வள்ளலாரும் முன்பு எழுதினர். 100 ஆண்டுக் கால சுயமரியாதை இயக்கம் நடத்தி வந்த ஜாதி - தீண்டாமை ஒழிப்புக்கான பல்வேறுத் தொடர் போராட்டங்கள் - தென்னாட்டில் திராவிட இயக்கங்கள், முற்போக்காளர்கள், தந்தை பெரியார், டாக்டர் அம்பேத்கர், வள்ளலார், அய்யா வைகுண்டர் போன்றவர்களின் எழுத்து, பிரச்சாரப் போராட்டங்கள் மூலம் பெரும் அளவு விழிப்புணர்வு ஏற்பட்டும் கூட இன்னமும் இப்படியா? சில புரியாதவர்கள் "அவர்கள் தோற்று விட்டனர்" என்று அவசர முடிவுடன் அவதூறு பரப்பவும் இந்த ஆணவக் கொலை நிகழ்வுகள் காரணமாக அமைந்து விடுகின்றன. (கடந்த 10 ஆண்டுகளில் 59 ஆணவக் கொலைகள் நடந்தாக நீதிபதி அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்).

மருத்துவக் கல்லூரிகள், மருத்துவ ஸ்பெஷலிஸ்டுகள் எல்லாம் இருந்தும் கூட எப்படி 2021இல் கரோனா - (கோவிட்- 19) தொற்றுப் பரவி, உலகையே உலுக்கிய தொடர் மரணங்கள் ஏற்பட்டன! அதனால் மருத்துவர்கள் தோற்றுவிட்டனர்; பயனற்றுப் போய் விட்டனர் என்று கூறினால் அது அறிவுடைமையா?

அதுதான் மேற்சொன்னதற்கும் விடை. என்றாலும் அண்ணல் காந்தியார் அவர்களைக் கோட்சே என்ற பார்ப்பன ஹிந்து மதவெறியன் சுட்டுக் கொன்றபோது, நம் மக்கள் நிதானமிழந்து விடாமல், மதக் கலவரமோ, ஜாதிக் கலவரமோ பரவிவிடாமல் தடுக்கத் தந்தை பெரியார் ஒன்றை நினைவூட்டினார் - ஆத்திரப்பட்ட மக்களிடம்!

கடுமையான தண்டனைகள் மூலம் தடுப்பது அவசியம் அவசரம்!

" காந்தியைச் சுட்டத் துப்பாக்கியைத் தண்டிப்பதைவிட, அதைப் பிடித்த கை 'மதவெறி' என்பதால், அதனை நோய் நாடி, நோய் முதல்நாடி ஒழிக்க அறிவு பூர்வமாகச் சிந்தித்தும், இந்த வெறித் தனத்தினை முடிவுக்குக் கொண்டு வர அனைவரும் முன்வர வேண்டும்" என்று அறிவுரை கூறி அமைதி ஏற்படுத்தினார் தந்தை பெரியார். (சான்று: 'புதிய தோர் உலகு செய்வோம்' நூல், தந்தை பெரியார்)

ஆணவக் கொலைகளைச் சட்டப்படியான கடுமையான தண்டனைகள் மூலம் தடுப்பது அவசியம் - அவசரம்.

'திராவிட மாடல்' ஆட்சியின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நம் இயக்கமும், முற்போக்காளர்களும், ஜாதி ஒழிப்புச் சிந்தனையாளர்களும் விடுத்த வேண்டுகோளை ஏற்று ஆணவக் கொலை ஏற்படா வண்ணமும், ஜாதி வெறி, ஜாதி ஆணவத்திற்கு எதிராகவும் வழிமுறைகளை அரசுக்குக் கூற உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி ஜஸ்டிஸ் திரு. கே.என்.பாஷா அவர்கள் தலைமையில் ஓர் ஆணையத்தினை அமைத்த நிலையில் இடையில் - தேர்தல் குறுக்கிட்டு விட்டது. ஆட்சி மாற்றத்தினால் அந்தப் பணி தேக்கமுறக் கூடாது; புதிய அரசு அதன் பணியினை விரைவுப்படுத்தி, அறிக்கையைப் பெற்று கிடப்பில் போட்டு விடாமல் அதி முக்கியத்துவம் வாய்ந்த இந்த ஆணவக் கொலைத் தடுப்பு விஷயத்தில் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வது முக்கியம்.

சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி அவர்களது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த - போற்றத்தக்க இந்த உத்தரவு விரைந்து வினையாற்ற அரசிற்கு ஒரு நல் வாய்ப்பாக அமைய வேண்டும்.

தொடர் நடவடிக்கையில் புதிய ஆட்சி ஈடுபட வேண்டும்!

சமூகத்தில் புரையோடிப் போயுள்ள ஒரு முக்கிய சமூகக் கொடுமையான இது படித்தவர்களைக்கூட வெறியாளர்களாக மாற்றிடும் ஒரு சமூகத் தொற்று! இதனைத் தடுக்கச் சட்டமும், சமூகத்தினரும் சேர்ந்து பணியாற்ற வேண்டும். ஜாதிமறுப்பு இணையர்களுக்குப் பாதுகாப்பு தரும் பொறுப்பை காவல்துறை மேற்கொள்ள வேண்டும். ஜாதி - தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரத்தினை நடத்துவோருக்குத் தக்க ஊக்கமும், தக்க பாதுகாப்பும் தருவது பற்றி ஆழ்ந்து யோசித்துச் செயலாற்ற ஆட்சியாளர்களும், கட்சி பேதமில்லா அனைத்து முற்போக்கு ஜாதி ஒழிப்பாளர்களும் முன் வர வேண்டும்.

18 வயது இளைஞர்கள் வாக்குச் செலுத்துவது எப்படி தடுக்க முடியாத உரிமையோ, அதைவிட முக்கியம் சட்டப்படி வயது வந்த ஆண், பெண் இருவருக்கும் தாங்கள் விரும்பியவர்களை மணந்து வாழும் உரிமை, அடிப்படை உரிமையாகும். தந்தை பெரியார் அவர்கள் "இதில் மற்றவர் தலையிடுதல் என்பது, தேவையற்ற ஆணவ அதிகாரத்தினைக் காட்டுவது அல்லாது வேறு என்ன?" என்றார் - சிந்தியுங்கள்.

சிறப்பான வரலாற்றுத் தீர்ப்பு (*Land Mark Judgement*) தந்த நீதிபதி அவர்களையும் பாராட்டி, சமூக நல் வாழ்வுக்கும், ஒருங்கிணைப்புக்கும் இத்தீர்ப்பு ஒரு கலங்கரை வெளிச்சமாக, சட்டம் என்ற இருட்டறையை ஒளிமயமாக்கியுள்ளதாக நன்றி கூறுகிறோம்.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இரா.செந்தில்குமார் - வ.பெ.சுரேஷ் முன்னிலை !

51அ வட்ட முன்னாள் செயலாளர் இரா.மருதுபாண்டியன் - தங்ககிளி இல்ல விழா!

ஆர்.டி.சேகர் - கலாநிதி வீராசாமி - ஐட்ரீம் இரா.மூர்த்தி - ஜே.ஜே.எபினேசர் பங்கேற்பு !

சென்னை, ஜூன்14

சென்னை வடக்கு மாவட்டம், இராயபுரம் கிழக்கு பகுதி 51(அ) முன்னாள் வட்ட கழக செயலாளர் இரா.மருதுபாண்டியன், ம.தங்ககிளி ஆகியோரின் இல்ல நிகழ்ச்சி மற்றும் இளைஞரணி கிழக்கு பகுதி துணை அமைப்பாளர் ம.அருண்பிரபாகரன், அ.பவானி, ஆகியோரின் செல்ல மகள் யாழ்நிரா முதலாம் ஆண்டு பிறந்த நாள் விழா இன்று (14.06.2026 ஞாயிற்றுக்கிழமை) பகல் 12.00 மணியளவில் ஆர்.எஸ்.ஆர்.எம். ஆஸ்பிட்டால் எதிரில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் மண்டபத்தில் நடைபெறுகிறது.

இராயபுரம் கிழக்கு பகுதிச் செயலாளர் இரா.செந்தில்குமார் தலைமையில் இராயபுரம் மேற்கு பகுதிச் செயலாளர் வ.பெ.சுரேஷ், எஸ்.டி.பாலசுப்ரமணியம், என்.மணிகண்டன், முன்னிலையில் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

வி.குமார், அத்தோ பி.முனுசாமி, கே. அப்துல் மாலிக், ஆர்.விஜயவர்மன், ஜி.செந்தில்குமார், என்.டி.சுரேஷ், எஸ்.இராஜேந்திரன், ஆகியோர் வரவேற்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர், டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஐட்ரீம் இரா.மூர்த்தி, ஜே.ஜே.எபினேசர், ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

பி.டி.பாண்டிசெல்வம், ந.மனோகரன், லயன் எம். தீனதயாளன், லயோலா கே.மதன், கட்பீஸ் ப.சோமசுந்தரமூர்த்தி, பி.சேகர், கு.சுந்தர், பி.செந்தில்குமார், எஸ்.திரு ஞான சம்பந்தம், இ.மதன், எஸ். புகழேந்தி, கொரியர் பி. முருகன், இரா.பாலன், க. கோவிந்தராஜ் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்கின்றனர்.

எம்.திலீபன்ராஜ் நன்றி கூறுகிறார்.

மும்பை தி.மு.க. பொறுப்புக் குழு உறுப்பினர்

பாந்திரா க.மு.மாணிக்கம் மறைவு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூன் 14-

மும்பை தி.மு.க. பொறுப்புக் குழு உறுப்பினர் பாந்திரா க.மு. மாணிக்கம் அவர்கள் உடல்நலக்குறைவால் மும்பை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று (13.06.2026 சனிக்கிழமை) பிற்பகல் 2 மணியளவில் மறைவெய்தினார் என்கிற செய்தியை அறிவிக்க வருந்துகிறோம்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

தகவல் அறிந்ததும் கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மறைந்த பாந்திரா க.மு. மாணிக்கம் அவர்களின் குடும்பத்தினருக்கும், மும்பை கழகத்தினருக்கும் ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

சென்னை மாதவரம் மண்டலம் 28வது வார்டு தி.மு.க. சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா மூலக்கடை சந்திப்பில் நடைபெற்றது. முன்னாள் கவுன்சிலர் டி.ராமகிருஷ்ணன் தலைமை வகித்து, கழகக் கொடி ஏற்றி – பொதுமக்கள், வியாபாரிகள் மற்றும் ஆட்டோ டிரைவர்கள், சிறுவர், சிறுமிகள் ஆகியோருக்கு இனிப்புகள் வழங்கினார். இதன் பின்னர், தி.மு.க. ஆட்சியில் கொண்டுவரப்பட்ட திட்டங்களையும் அதனால் தற்போது வரை மக்களுக்கு ஏற்பட்டு வரும் பயன்களையும் விளக்கினர். இதில், நிர்வாகிகள் மிசா.மதிவாணன், செங்குட்டுவன், டி.ஆர்.ரவிந்திரகுமார். சசிகுமார், மோகன், பன்னீர், ராமன், இளவரசி,கவுன்சிலர் கனிமொழி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.